DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.250/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தமிழழகன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | தியாகராஜன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கீழசிந்தலவாடியில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரை எனக்குத் தெரியும். இறந்து போன மணி என்பவரைத் தெரியும். ஆஜர் எதிரியை சிவக்குமாரைத் தெரியும். (சாட்சி நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டினார்.) 17.01.2022 அன்று மாலை 03.15 லிருந்து 03.30 மணியிருக்கும் நான் எனது வண்டிக்கு சாமான்கள் வாங்குவதற்காக கரூர் செல்வதற்காக நானும் எனது நண்பர் பார்த்திபனும் இருசக்கர வாகனத்தில் லாலாப்பேட்டையிலிருந்து கரூர் சென்று கொண்டிருந்தபோது சிந்தலவாடி அருகே ராஜு என்பவர் தோட்டம் அருகே அஜர் எதிரி TN 49 BU 6770 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்பாக வேகமாக சென்று கொண்டிருந்தார்.

2. திருச்சி – கரூர் ரோட்டில் இடது ஓரமாக அ.சா.1 மற்றும் அவரது கணவர் நின்று கொண்டிருந்தார்கள். அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆஜர் எதிரி வண்டியை ஓட்டி வந்து கொண்டிருந்தார். நின்று கொண்டிருந்த மணி என்பவர் மீது மோதிவிட்டார். மோதி நிறுத்தாமல் சென்றுவிட்டார். பிறகு நானும் எனது நண்பர் பார்த்திபனும் ஆம்புலன்சில் ஏற்றி கரூர் அனுப்பினோம். மணி

என்பவரை தூக்கி பார்த்தபோது தலை, கை, கால், முட்டி, முகம், ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது.

3. விபத்திற்கு யார் காரணம் என்றால் ஆஜர் எதிரி தான் காரணம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தது தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் போலிஸ் விசாரணை வாக்குமூலத்தில் நான் எங்களுக்கு முன்பாக ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 தாமரை எனக்கு என்ன வேண்டுமென்றால் உறவினர் ஆவார். சாட்சி பார்த்திபன் எனக்கு என்ன வேண்டுமென்றால் உறவினர்தான்.

2. விபத்து நடந்த இடம் திருச்சி–கரூர் கிழமேல் ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் ஒரே நேரத்தில் 3 கனரக வாகனங்கள் செல்லக்கூடிய அளவுக்கு அகலம் உடையது என்றால் சரிதான். எங்கள் ஊர் ரோட்டிலிருந்து தென்திசையில் உள்ளது. எங்கள் ஊருக்குச்செல்லவேண்டுமென்றால் சித்தலவாய் மேம்பாலத்திற்கு முன்பாக வடக்கு திசையில் கட் ரோட்டில் செல்லவேண்டும் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு செல்லும் கட்ரோட்டிற்கு எந்த பக்கம் விபத்து நடந்தது என்றால் கட் ரோட்டிற்கு கிழக்குப்புறம் நடந்தது.

3. விபத்து நடந்த இடம் தார்ரோடா , மண்ரோட என்றால் தார்ரோடாகும். நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன் எனது நண்பர் பின்னால் உட்கார்ந்திருந்தார். அப்போது எங்கு செல்வதற்காக சென்றோம் என்றால் கரூர் செல்வதற்காக சென்றோம். நான் எங்கிருந்து வந்தேன் என்றால் லாலாப்பேட்டை பஸ் ஸ்டாபிலிருந்து வந்தேன். நான் சத்தம் கேட்டு விபத்து நடந்ததை பார்த்த பிறகு தான் எங்கள் ஊரைச்சேர்ந்த மணி என்பவருக்கு அடிபட்ட விவரம் தெரியவந்தது என்றால் இல்லை என் கண் முன்னாலேயே விபத்து நடந்தது.

4. விபத்து நடந்த போது அங்கு எத்தனை பேர இருந்தார்கள் என்றால் நாங்கள் தான் போய் தூங்கினோம் பிறகு 5 அல்லது 6 பேர் வந்துவிட்டார்கள்.

விபத்து நடந்ததாக சொல்லப்படும் ரோடு தேசிய நெடுஞ்சாலை என்பதால் போக்கு வரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் போக்கு வரத்து அதிகமாக இருப்பதால் மக்கள் தார்ரோட்டில் நிற்காமல் இருபுறமும் உள்ள மண்ரோட்டில் நிற்க வேண்டும் என்றால் சரிதான்.

5. ஏன் மணி தார்ரோட்டில் இருந்தார் என்றால் ஆடு மேய்த்து கொண்டிருந்தார், முள் செடிகள் இருந்ததால் தார்ரோட்டில் ஓரமாக நின்று கொண்டிருந்தார். அந்த இடத்தில் முள் செடி இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது நண்பரும் அ.சா.1ம் சம்பவ இடத்தில் நேரில் பார்த்த சாட்சிகள் இல்லையென்றாலும் இறந்து போன நபர் எங்களுக்கு உறவினர் என்பதால் எங்களை கண்ணுற்ற சாட்சிகளாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 10:52:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.